IMPACT FACTOR- 4.520 ISSN NO- 2456-7078

Volume-1, Issue-VI, Sept- 2017

# Research maGma

## An International Multidisciplinary Journal

## CONFERENCE

of

Thiruvalluvar University
College of Arts & Science, Arakkonam.

on

# "EMERGING TRENDS IN ENGLISH LANGUAGE & LITERATURE”

Research maGma
An International Multidisciplinary Journal
ISSN NO- 2456-7078 IMPACT FACTOR- 4.520 VOLUME-1, ISSUE-7, SEPT-2017

# விவிலியம் காட்டும் பெண் உரிமைச் சிந்தனைகள்

[1]ப.பிரேமலதா மற்றும் [2]கோ.சாந்தமூர்த்தி
[1]எம்.ஃ.பி ல் ஆய்வு மாணவர் [2]உதவிப் பேராசிரியர்
[1இ2]தமிழ்த்துறை, அரசு கலைக்கல்லூரிஇ திருவண்ணாமலை.

ஆய்வுச்சுருக்கம்:

சமூக அமைப்பு, கல்வி, வேலை, பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளில் ஆண்களுக்குள்ள சுதந்திரமும், உரிமையும் பெண்களுக்கும் வேண்டும் என்பதே பெண் உரிமைச் சிந்தனைகளாகும். 'றுழஅயளைஅ' என்ற சொல் பெண்களின் உரிமைப்பிரச்சனைகளையும் அதனடிப்படையிலான போராட்டங்களையும் குறிப்பிடுகிறது". றுழஅயளைஅ என்ற சொல்லினிடத்தை 1890-ல் குநஅiளைஅ என்ற சொல் பெற்றது. " 'குநஅiளைஅ' என்ற சொல்லிற்கு ஆக்ஸ்போர்டு அகராதி பெண்களின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக போராடுவது". என்ற பொருளைத் தந்துள்ளது. பெண்ணுரிமையைப் பற்றி அறிஞர் ஒருவர்இ "அஃறிணை உலகில் பெண்ணுரிமைக்குப் பழுதுநேர்ந்ததில்லை. பாழான ஆறறிவுடைய உயர்திணை உலகிலே அவ்வுரிமைக்கு பழுது நேர்ந்திருக்கிறது". என்று கூறுவதன் மூலம் பெண்கள் தங்களுக்கான உரிமைகளை இழந்து காணப்படுவதை அறியமுடிகிறது.

உலகிலுள்ள ஒவ்வொரு நாடும் பெண்களுக்கு உரிமை வழங்கிய பின்னரே சுதந்திரமடைந்தது என்பது சரித்திரத்தின் மூலம் நாம் காணும் உண்மை எனவேதான் பாரதிதாசன் தம்முடைய கவிதையில்,

"பெண்ணடிமை தீருமட்டும் பேசும் திருநாட்டின்
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே"

விவிலியத்தில் பெண்ணின் இயல்புகள், அவளுக்கான ஒழுக்கநெறிமுறைகள் இடம்பெற்றுள்ளது போலவே, அவர்களுக்கான உரிமைகளும் குறிப்பிடப்பட்டுள்ளன.

மூல வார்த்தைகள்:

பெண்ணுரிமைஇ ஒழுக்கநெறிமுறைகள்

## ஆண்பெண் சமத்துவம்

சமுதாயத்தில் ஆண்களுக்கு அளிக்கப்படும் மதிப்பு பெண்களுக்கும் அளிக்கப்படும்போது இவ்வையகம் தழைக்கும் என்பதைப் பாரதியார் தம்முடைய கவிதையில்,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"

என்று குறிப்பிடுகிறார். இத்தகைய கருத்தே விவிலியத்தில் இறைவனுடைய பார்வையில் ஆண்,பெண் இருவரும் சமம் என்பதை,

"தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்"(ஆதியாகமம்:1:26,27)

"கர்த்தருக்குள் ஸ்தரீயில்லாமல் புரு'னுமில்லை, புரு'னில்லாமல் ஸ்திரீயுமில்லை"

என்ற இவ்விரு வசனங்களும் உணர்த்துகின்றன. மேலும், "ஆண்கள் மட்டும் தனியாக தேவனுடைய முழு சாயலையும் பிரதிபலிக்க முடியாது. அதுபோல பெண்கள் மட்டும் தனியாக தேவசாயலை வெளிப்படுத்த இயலாது. ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் தேவசாயலை வெளிப்படுத்த முடியும்" என்ற ஹெலன் ஜேக்கப் கூற்றின் மூலம் ஆண்,பெண் இருவருக்குமான முக்கியத்துவத்தைக் காணமுடிகிறது. விவிலியத்தில் மனிதர்களுக்குள் எந்த பாகுபாடின்றி அனைவரும் கிறிஸ்துவுக்குள் சமமாகக் கருதப்படுவதை, "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர்:3:28) என்ற வசனத்தின் மூலம் அறியலாகிறது. இதனையே பாரதிதாசன்,

"வல்லவர் சேசு வகுத்ததுதான் என்ன? தோழி – புவி மக்கள் எல்லாம் சமம் என்று முழங்கினர் தோழா"

என்ற பாடலடிகளில், வல்லவர் சேசு என்பது இறைவனாகிய இயேசுகிறிஸ்துவை குறிப்பிடுகிறது. பூமியில் உள்ள மக்கள் அனைவரும் சமம் என்று இயேசு வகுத்திருப்பதை சுட்டிக்காட்டியுள்ளார்.

### திருமணத்தில் பெண் உரிமை

மணம் என்ற சொல்லுக்கு 'கூடுதல்' என்பது பொருள். இதன் வேர்ச்சொல் மண் என்பதாகும். மண்ணுதல் என்ற சொல் கழுவுதல், கலத்தல், கூடுதல், அழகுபெறுதல் ஆகிய பொருள்களைக் குறிக்கிறது. திருமணம் சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட சட்டஉறவுமுறை ஆகும். குடும்பம், பாலுறவு, இனப்பெருக்கம், பொருளாதாரம் போன்ற பல காரணங்களுக்காக திருமணம் செய்யப்படுகிறது.

ஓர் ஆணும் பெண்ணும் இவ்வுலக வாழ்க்கையில் ஒற்றுமையோடு சமத்துவமாய் வாழ இருவரும் மனஒற்றுமையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தமே திருமணம். திருமணத்தில் ஆண்களின் விருப்பத்தை அறிவது போல, பெண்களின் விருப்பத்தை அறிவதில்லை. இன்றைய திருமணங்களை நிர்ணயிப்பதில் பணம், படிப்பு, அழகு, வசதி, பெற்றோரின் பெருமை, விருப்பம், வயதுவந்தோர்களின் ஆசைநிறைவேற்றம், சாதி, இனம், கோத்திரம் இவைகளே முன்னிலை வகிக்கின்றன. இன்றைய நாளில் படித்த பெண்களுக்கும் கூட முடிவு எடுப்பதற்கான வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை. பெற்றோரின் விருப்பத்தை மீறி திருமணம் செய்துகொள்ளும் பிள்ளைகளை பெற்றோரே கொல்லக்கூடிய ஆணவக் கொலைகளும் பெருகிவருகின்றது.

### ஈசாக்கு ரெபாக்காள் திருமணம்

வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாட்டில் முதல் புத்தகமான ஆதியாகமம் 24-ஆம் அதிகாரத்தில் ஈசாக்கு ரெபாக்காள் திருமண நிகழ்வு இடம்பெற்றுள்ளது. ஆபிரகாம் தன் மகனாகிய ஈசாக்குக்கு பெண் கொண்டுவரும்படி தன்னுடைய மூத்த வேலைக்காரனை தன் இனத்தாரிடத்திறகு அனுப்புகிறான். ஆவன் பெத்துவேலின் மகள் ரெபாக்காளின் வீட்டிற்குச் சென்று பொன், வெள்ளி, ஆடைகள், காதணி கடகங்கள் ஆகியவற்றை ரெபாக்காளுக்குக்

கொடுத்தான். அவளுடைய தாய்க்கும், சகோதரனுக்கும் விலையுயர்ந்த பொருட்களையும் கொடுத்து கேட்டான்.

யூதர்களின் வழக்கப்படி ஒரு வேலைக்காரனை அனுப்பிகூட பெண்கேட்கும் வழக்கம் இருந்தபடியால், ரெபாக்காளின் குடும்பத்தார் அவளின் விருப்பத்தை அறிந்து அனுப்பி வைத்தனர். இதனை, "அப்பொழுது அவர்கள் பெண்ணை அழைத்து, அவள் வாய்ப்பிறப்பைக் கேட்போம் என்று சொல்லி, ரெபாக்காளை அழைத்து நீ இந்த மனிதனோடே கூடப் போகிறாயா என்று கேட்டார்கள் அவள் போகிறேன் என்றாள்" என்ற வசனத்தின் மூலம் மணமகளின் விருப்பத்திற்கு இணங்கியே திருமணத்திற்கு இசைவு தெரிவித்ததை அறியமுடிகிறது.

### விதவை மறுமணம்

ஒரு பெண் தன் கணவனை இழந்துவிட்டால் அவள் "விதவை, கைம்மையர், அறுதலி, முண்டச்சி, நூலிழந்தோர், அமங்கலி முதலிய பெயரால் குறிப்பிடப்படுகிறாள்" நல்ல நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள அனுமதிப்பதில்லை இச்சமூகம், மனைவியை இழந்த கணவனை எவ்விதபெயரும் சொல்லி குறிப்பிடுவதில்லை. ஓர் ஆண் தன் மனைவி இறந்தால் இன்னொரு பெண்ணை மணமுடிக்க ஏற்றுக்கொள்ளும் சமுதாயம், கணவனை இழந்த பெண் வேறொரு ஆணை மணந்துகொள்வதை ஏற்பதில்லை.

சமூக சீர்திருத்தவாதிகளான ராஜாராம் மோகன்ராய், ஈஸ்வர சந்திர வித்யாசாகர், கேசவசந்திரசென் போன்றோர் பலதார மண எதிர்ப்பு, சதி ஒழிப்பு, குழந்தை மணஎதிர்ப்பு, பெண்கல்வி, விதவைமறுமணம், சீர்த்திருத்தங்களை முன்வைத்து பெண்உரிமைகளுக்கு வித்திட்டனர். இதனடிப்படையில் விதவைமறுமணச்சட்டம் இந்தியாவில் 1856-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. ஆனால் கிறிஸ்துவ வேதாகமத்தின் அடிப்படையில் மறுமணம் செய்துகொள்ள அனுமதித்துள்ளதை,

"மனைவியானவள் தன் புருஷன் உயிரோடிருக்குங் காலமளவும் பிரமாணத்தினால் கட்டப்பட்டிருக்கிறாள் ? தன் புருஷன் மரித்த பின்பு தனக்கு இஷ்டமானவனாயும் கர்த்தருக்குட்டவனாயுமிருக்கிற எவனையாகிலும் விவாகம் பண்ணிக்கொள்ள விடுதலையாயிருக்கிறாள்"

ஐ கொரிந்தியர் 7-ஆம் அதிகாரம் 39-இல் உள்ள இவ்வசனம் பெண்களுக்கு ஆதரவான மறுமணத்தைக் குறித்து குறிப்பிட்டுள்ளது.

### மருமகளுக்கு மறுமணம்

மாமியார் மருமகள் என்றாலே எலியும் பூனையுமாக இருப்பதைத்தான் இவ்வுலகம் கண்டிருக்கிறது. முாமியார் மருமகளை குறைகூறி வீட்டைவிட்டு துரத்துவதும், மருமகள் மாமியாரைக் குற்றப்படுத்தி அவரை முதியோர் இல்லத்தில் சேர்க்கும் அவலங்கள் இன்று சமூகத்தில் பெருகிகாணப்படுகிறது. இதற்கு முற்றிலும் மாறான மாமியார் மருமகள் உறவு குறித்து வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில் உள்ள ரூத் என்ற புத்தகம் எடுத்துக்காட்டுகிறது.

இஸ்ரவேல் நாட்டின் பஞ்சம் காரணமாக மோவாப் நாட்டிற்கு எலிமலேக்கும், நகோமியும் இவர்களின் மகன்கள் இருவரும் பினடிக்கச் சென்றனர். அங்கு நகோமியின் கணவன் இறந்துவிடுவதால் தன் கடைமையின்பொருட்டு மோவாபிய பெண்கள் இருவரை தன் மகன்களுக்கு மணமுடிக்கிறாள் நகோமி. இருமகன்களும் திருமணமான சில ஆண்டுகளுக்குள் இறந்துவிட நகோமி தன் மருமகள்களை தாய்வீட்டிற்குப் போகச் சொல்கிறாள். மூத்தவள் தாய்வீட்டிற்கு சென்றுவிட, இளையவளான ரூத் நகோமியை விட்டு பிரியாமல் அவளுடனேயே இருக்கிறாள்.

நகோமியும் ரூத்தும் ஒருவர் மீது ஒருவர் கரிசனையுள்ளம் கொண்டு வாழ்கின்றனர். ரூத் தன்னுடைய இனத்தையும், குடும்பத்தையும், நாட்டையும் விட்டு நகோமியின் மீது

கொண்ட அன்பினால் அவரடன் இஸ்ரவேல் நாட்டிலேயே தங்கி விடுகிறாள். நகோமி நினைத்திருந்தால் ரூத்தை தன்னுடனேயே வைத்திருந்திருக்கலாம். ஆனால் தான் மருமகளின் நலநன விரும்பியதால், தன் உறவுக்குரிய மிகுந்த செல்வந்தனான போவாசிற்கு திருமணம் முடிக்கிறாள். இதனை,

"பின்பு அவள் மாமியாகிய நகோமி அவளை நோக்கி: என் மகளே, நீ சுகமாய் வாழ்ந்திருக்கும்படி நான் உனக்கு சவுக்கியத்தைத் தேடாதிருப்பேனோ"30 என்ற வார்த்தையின் மூலம், நகோமி ரூத்தாகிய தன் மருமகளை மகளே என அழைப்பதும், அவளின் இளமை வீணாகாதபடிக்கு அவள் நலனில் அக்கறை கொள்வதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாமியார் மருமகள் உறவுமுறைக்கு சிறந்த உதாரணங்களாக நகோமி, ரூத் ஆகியோர் விளங்குவதை இதன் வாயிலாக அறியலாகின்றது.

## சொத்துரிமை

ஆண்களுக்கு சொத்தில் பங்கு இருப்பதுபோல பெண்களுக்கும் பங்கு உண்டு என பொதுவாக தெரியுமே தவிர, பெண்களுக்கான சொத்துரிமைப்பற்றிய சட்ட விழிப்புணர்வு பெண்களில் பலருக்கு தெரிவதில்லை. பெண்கள் தங்களுக்கான உரிமைகளைப் பற்றி தெரிந்துகொண்டால் மட்டுமே அதற்காகப் போராட முடியும். உரிமையும் கிடைக்கும்.

இந்திய சட்டத்தில் பெண்களுக்கான சொத்துரிமைகள் 1956-இல் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்திற்கு முன்பு பெண்களுக்குப் பிறந்தவீட்டில் தங்குவதற்கான உரிமை மட்டுமே இருந்தது. சொத்தில் எவ்வித உரிமையும் கிடையாது. பிறந்த வீட்டில் பெண்ணற்கு கொடுக்கும் சீதனம் மட்டுமே அவளின் சொத்தாக இருந்தது.

2005-இல் கொண்டுவரப்பட்ட சட்டத்திருத்தத்தின்படி பெண்கள் தங்களின் தந்தையின் சொத்தில் பங்குபெற முடியம். ஆனால் விவிலியத்தில் கூறப்பட்டுள்ள அக்சாள் எனும் பெண் தன் தந்தையிடம் தனக்கு வேண்டிய சொத்தினை உரிமையோடு கேட்கிறாள். ஆவளின் தந்தையாகிய காலேப், அக்சாள் கேட்டவாறே செழிப்பான நிலங்களைத் தன் மகளுக்குத் தருவதை நியாயாதிபதிபுத்தகம் 1-ஆம் அதிகாரம் 15-ஆவது வசனத்தில் காணும்போது,

"அப்பொழுது அவள்: எனக்கு ஒரு ஆசிர்வாதம் தரவேண்டும்? வறட்சியான நிலத்தை எனக்குத் தந்நீர்? நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்? அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான, நிலங்களைக் கொடுத்தான்"27 ஏற்கனவே நிலங்களை பெற்றுக்கொண்ட அக்சாள் அது வறண்டநிலம் என்பதால், நல்லநிலங்களையும் கேட்டுப்பெற்றுக்கொள்வதை காணலாகிறது.

இன்றைய பெண்களில் பெரும்பான்மையோர் தன் குடும்ப சொத்துக்களை உரிமையோடு கேட்பதில்லை. அவர்கள் என்ன கொடுக்கிறார்களோ அதை மட்டும் பெற்றுக்கொள்கிறார்கள். குடும்ப உறவின் நிமித்தம் கேட்க தயக்கமடைகின்றனர். ஆனால், அக்சாள் தனக்குரிய பங்கை ஏற்கனவே பெற்றுக் கொண்ட பின்னரும், மேன்மையான நிலத்தை கேட்டு வாங்கிக்கொள்வதைக் காணும்போது, பெண்களுக்கு எத்தகைய உரிமை இருந்தது என்பது புலனாகின்றது.

## முடிவுரை

உலகின் நாடுகள் ஒவ்வொன்றும் தங்களின் பெண்களுக்கு உரிமை வழங்கிய பின்னரே சுதந்திரமடைந்தனர் என்ற உண்மை புலப்படுத்தப்பட்டுள்ளது.

விவிலியத்தைப் பொறுத்தவரையில் ஆண்பெண் இருவரிடையே சமத்துவம் நிலவியுள்ளமைக் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

ஓர் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் திருமண பந்தம் விவிலியத்தின் மூலம் எந்தளவுக்கு செம்மையும், ஒழுக்கமுமாகிய நிலைகளில் கையாண்டனர் என்பது

குறிப்பிடப்பட்டுள்ளது.

திருமணம், மற்றும் சொத்துநிலையின் விவரங்களையும், விளக்கங்களையும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விதவை மறுமணம் என்ற சீர்த்திருத்தம் வேதாகமத்தில் இடம்பெற்றுள்ளதை ஆராயப்பட்டுள்ளது.

ரூத் என்ற பெண்ணிற்கு அவளின் மாமியார் திருமணம் செய்துவைத்த நிகழ்வு எத்தகைய நெகிழ்வை ஊட்டுகிறது என்பது விளக்கப்பட்டுள்ளது.

## துணைநூற் பட்டியல்:

1. இராகவன் அ. பெண்ணுரிமையும் மதமும், திராவிடர் கழக வெளியீடு, வேப்பேரி, சென்னை – 07

2. முனைவர் ஆல்.ஃ.பிரட் தேவதாசன் வாழ்வியல் விளக்க வேதாகமம், கிறிஸ்துவின் வார்த்தை நூல் நிலையம், மேடவாக்கம், சென்னை.

3. பரிசுத்த வேதாகமம் இந்திய வேதாகமச் சங்கம், 206, மகாத்மா காந்தி சாலை, பெங்களூர் - 560001

Research maGma